# இரும்பின் குரல்

AMMAN-TRY

இது ஒரு **AMMAN - TRY**-யின் முயற்சி

திருச்சி | பிப்ரவரி 2021 | 12 பக்கம் | இலவசம் | இதழ் 2





## உங்கள் கனவுகளை மீண்டும் உருவாக்குங்கள்

இப்புத்தாண்டை மாபெரும் வெற்றி ஆண்டாக அகமகிழ்ந்து வரவேற்போம்.
காணுகின்ற கனவுக்கு சக்தி உண்டு,
நாம் நம் கனவுக் கோட்டையை சக்தி மிகுந்ததாய் எழுப்புவோம்,
ஒற்றுமையுடன் செயல்பட்டு வெற்றி பெறுவோம்.

**கனவு மெய்ப்படவே...**

# MD'S DESK


## Launch of Structural Engineer Scheme



அன்புள்ள வாசகர்களே...

உங்களுக்கு தெரிந்தபடி AMMAN-TRY அதன் வணிகத்தின் தொடக்கத்திலிருந்து பல புதிய அறிமுகம் மற்றும் செயல்படுத்துதலுடன் தொழில்துறையில் ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக எங்களுடைய கட்டமைப்பு பொறியாளரின் இலவச ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுங்கள். கட்டிடங்கள் பல தலைமுறைகளாக நீடித்து நிலைத்து நிற்பதற்கு, அனுபவமிக்க கட்டமைப்பு பொறியாளர்களின் (Structural Engineer) ஆலோசனை மிகவும் அவசியம்.

கடந்த 42 வருடங்களாக வாடிக்கையாளர்களின் சேவையில் AMMAN-TRY நிறுவனம் தனது சிறப்பான பங்களிப்பை அளித்து வருகின்றது. மேலும் தற்போது புதிதாக வீடு கட்டுபவர்களுக்கு கட்டமைப்பு பொறியாளரால் (Structural Engineer) கட்டுமான பொருட்கள் குறித்த இலவச ஆலோசனைகளை வழங்குகின்றோம்.




### Login to www.ammantry.com

Submit your details

Your Name *

Email Id *

Phone Number *

City *

Total Sq.ft area *

Build up area (length & width) *

No. of floors. *

Facing *

North

Type of soil (optional)

Coarse Sand (or) Loose

What stage is it right now? *

Foundation

Working Plan (optional)

Choose file No file chosen

Submit

*தோராயமான மதிப்பீடு

பதிவிடும் முறை :

- பெயர்
- மொபைல் எண்
- மனையின் சதுர அடி
- எத்தனை மாடி கட்டிடம்
- மின்அஞ்சல்
- நகரம்
- கட்டிடத்தின் நீளம் மற்றும் அகலம்
- வாசல் எந்த திசை
- கட்டிடத்தின் நிலை
- கட்டிடத்தின் பிளான் இருந்தால் அதனை பதிவேற்றவும்
- இறுதியில் **Submit** பட்டனை அழுத்தவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி எங்கள் Expert–ன் ஆலோசனையை பெறுங்கள்.

- https:// ammantry.com website–ல் சென்று பின்னர் மெனுவில் free expert opinion தேர்ந்தெடுக்கவும் அல்லது https://ammantry.com/free-expert-opinion என்ற லிங்கை டைப் செய்து பார்வையிடவும்.
- பிறகு உங்கள் மின்னஞ்சலுக்கு ஒரு ஒப்புதல் கிடைக்கப்பெறுவீர்கள்.
- கட்டமைப்பு பொறியாளரின் (Structural Engineer) கருத்துடன் எங்கள் குழு விரைவில் உங்களுக்கு பதிலளிப்பார்கள்.


# DEALERS GOLD COIN SCHEME





திருச்சியை தலைமை இடமாக கொண்டு செயல்பட்டு வரும் அம்மன்-TRY ஸ்டீல்ஸ் (பி) லிமிடெட் நிறுவனம் தமிழகம் முழுவதும் சுமார் 350-க்கும் மேற்பட்ட அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களை கொண்டு செயல்பட்டு வருகின்றது. AMMAN-TRY கம்பியை கொள்முதல் செய்து Gold Coin இலக்கை அடைந்த 250-க்கும் மேற்பட்ட விற்பனையாளர்கள் அனைவருக்கும் 6-9-2020 அன்று திருச்சியிலும் மற்றும் 3 & 4-10-2020 அன்று புதுச்சேரியில் பிரமாண்டமாக விழா ஏற்பாடு செய்து பரிசுகள் வழங்கப்பட்டது. இத்துடன் இரும்பின் குரல் புத்தக வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. புத்தகத்தை அம்மன்-TRY நிர்வாக இயக்குநர் வெளியிட புதுக்கோட்டை கருப்பையா & கோ., உரிமையாளரும், திருத்துறைபூண்டி S.A.T சண்முக நாடார், உரிமையாளரும் மற்றும் திருச்சி கண்ணாதாள் ஸ்டீல், உரிமையாளரும் பெற்றுக்கொண்டார்கள். ■

# BARBENDER MEETING



கடந்த 20 ஆண்டுகளாக இன்ஜினியர்களிடமும், பார்பெண்டர்களிடமும், ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடல் நிகழ்ச்சியை AMMAN-TRY நிறுவனம் நடத்திக்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக 2020 ஆண்டுகான பார்பெண்டர் ஆலோசனை மற்றும் விழிப்புணர்வு கலந்துரையாடல் நிகழ்ச்சி செப்டம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 15 ஊர்களில் உள்ள டீலர்களின் இடத்திலேயே கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சுமார் 675-க்கும் மேற்பட்ட பார்பெண்டர்களுக்கு மிக சிறந்த முறையில் கம்பியின் தரத்தை பற்றிய, விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டது மற்றும் எங்களின் விளம்பரத்துறை மேலாளரும், Quality control மேலாளர்களும் இன்ஜினியர்களை நேரில் சந்தித்து அவர்களின் ஆலோசனை கேட்டறிந்து AMMAN-TRY கம்பியின் சிறப்புகள் பற்றியும் எடுத்துரைத்தார்கள். ■

# பம்பர் பரிசு திட்டம்













AMMAN-TRY கம்பிகளை தேர்வு செய்யும் பில்டர்கள், இன்ஜினியர்கள், கான்ட்ராக்டர்கள், மேஸ்திரிகள், பார்பெண்டர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் அனைவரையும் ஊக்குவிக்கும் முயற்சியாக 2019 ஆண்டு அக்டோபர் மாதம் முதல் பம்பர் பரிசு திட்டம் தொடங்கப்பட்டது. அக்டோபர் 15, 2019 முதல் ஜனவரி 15, 2020 வரை அறிவிக்கபட்ட பம்பர் பரிசு திட்டத்தில் இலக்கை அடைந்த அனைவருக்கும் 2020, பிப்ரவரி மாதத்தில் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது. இரண்டாவது பம்பர் பரிசு திட்டம் ஜனவரி 15, 2020 முதல் ஏப்ரல் 30, 2020 வரை அறிவிக்கப்பட்டது.

இதில் இலக்கை அடைந்த அனைவருக்கும் கரோனா ஊரடங்கு காரணமாக அவர்களுடைய வங்கி கணக்கில் பணமாக செலுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து கடந்த மே 01, 2020 முதல் நவம்பர் 31, 2020 வரை 06 மாதங்கள் கொண்ட பம்பர் பரிசு திட்டம் மூன்றாவது முறையாக அறிவிக்கப்பட்டது. இதில் பங்கு பெற்று இலக்கை அடைந்த பில்டர்கள், இன்ஜினியர்கள், கான்ட்ராக்டர்கள், பார்பென்டர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் என மொத்தம் 578 நபர்களுக்கு கரோனா தொற்று பரவல் மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றும் நோக்கத்தில் அந்தந்த மாவட்டங்களில் விழா ஏற்பாடு செய்து பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது.

**5 டன்னுக்கு - 20 கிராம் வெள்ளி நாணயம்**
**10 டன்னுக்கு - பிராண்டட் மிக்ஸி ஒன்று**
**15 டன்னுக்கு - 1 கிராம் தங்க நாணயம்**
**20 டன்னுக்கு - பிராண்டட் மொபைல் போன்**
**25 டன்னுக்கு - பிராண்டட் ஹோம் தியேட்டர் ஒன்று**
**50 டன்னுக்கு - 32-இன்ச் ஸ்மார்ட் (LED)டிவி**
**75 டன்னுக்கு - பிராண்டட் லேப்டாப் ஒன்று**



# பொங்கல் கொண்டாட்டங்கள்









AMMAN-TRY நிறுவனத்தில் அனைத்து ஊழியர்களுக்கும் பொங்கல் கொண்டாட்ட நிகழ்வுகளை முதல் முறையாக திருச்சியில் உள்ள எங்களது தொழிற்சாலையிலும் மற்றும் ஆந்திராவில் உள்ள நாயுடுபேட்டை தொழிற்சாலையிலும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.


அலுவலக ஊழியர்கள் மற்றும் தொழிற்சாலை ஊழியர்கள் சுமார் 750பேர் பங்கேற்றார்கள். விழா நிகழ்வில் நமது தமிழக பாரம்பரியமிக்க விளையாட்டுகள் அனைத்தும் நடைபெற்றது. தொழிற்சாலைகளிலிருந்த பெரும்பான்மையான வட இந்திய தொழிலாளர்களும் இவ்விழாவினை கண்டு களித்தது மட்டுமில்லாமல் அனைத்து விளையாட்டுகளிலும் பங்கு பெற்று விழாவினை சிறப்பித்தார்கள்

# வாடிக்கையாளர்களின் கேள்வி?

## லைட் வெயிட் கம்பிகளை வாங்கலாமா? பயன்படுத்தலாமா? அப்படி பயன்படுத்தினால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படும்?

**கட்டுமானத்திற்கு பயன்படும் TMT கம்பிகளில் சில பிராண்ட் கம்பிகள் ISIயில் சொல்லப்பட்டதை விட Section Weight குறைவான கம்பிகள் பரவலாக கிடைக்கிறது. இத்தகைய Low Weight கம்பிகளை பயன்படுத்துவதால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படும் என்பதை எனக்கு விளக்குமாறு இன்ஜினியர் அவர்களை பணிவுடன் கேட்டுகொள்கிறேன்**

**முகமது யாசின், சைட் சூப்பர்வைசர்**



அன்புள்ள பொறியாளர் முகமது யாசின், சில பிராண்ட் TMT கம்பிகளின் SECTION WEIGHT குறைவாக இருந்தால் (விலை சிறிது அளவு குறைவாக உள்ளது என்பதால்) அவற்றை வாங்கி கட்டுமானங்களில் கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது. எத்தனை சதவீதம் Section Weight (Sectional area too) குறைவாக உள்ளது என்பதை கணக்கிட்டு அதற்கேற்ப கூடுதல் கம்பிகளையும், Vertical Stirrups களின் இடைவெளியை குறைத்தும் (say 8mm #@200 c/c->8#@150c/c ஆக) கட்டிங் கான்கிரீட் போட வேண்டும் எனவே எந்த காரணத்திற்காகவும், எந்த சூழ்நிலையிலும் Non-ISI கம்பெனிகளின் உறுதியூட்டிக் கம்பிகளை வாங்கவோ கட்டுமானங்களில் பயன்படுத்தவோ கூடாது.


**இன்ஜினியர் M.வீரப்பன்**
(Retired senior Engineer, PWD,TN)

| Section (mm) | Normal Weight (kg/mtr) | Area (mm2) | Normal weight with stand Capacity |
|---|---|---|---|
| 12 mm | 0.888 | 113 | 6 Ton |
| 16 mm | 1.579 | 200 | 10 Ton |

| Section (mm) | Light Weight (kg/mtr) | Area (mm2) | Light weight with stand Capacity |
|---|---|---|---|
| 12 mm | 0.800 | 103 | 5 Ton |
| 16 mm | 1.420 | 180 | 9 Ton |

லைட் வெயிட் கம்பிகளால் கட்டப்பட்ட கட்டிடத்தின் புறத்தோற்றத்தில் இதன் பாதிப்புகள் வெளியில் தெரியாது. ஆனால் உட்கட்டமைப்பில் பாதிப்பு ஏற்பட்டு கட்டிடங்களின் தாங்கும் திறன் குறைந்து விடும், வெடிப்புகள் உண்டாகும் மேற்கொண்டு விரிவுபடுத்த முடியாது.

# 550 / 600 GRADE



**AMMAN-TRY கம்பிகளால் கட்டப்பட்டு பல வருடங்களாக நீடித்து நிலைத்து நிற்கும் கட்டிடங்களே இதற்கு சான்று**

பல கம்பி தயாரிக்கும் நிறுவனங்கள் தங்கள் விற்பனை முன்னேற்றத்திற்காக 550, 600 கிரேடு கம்பிகளை அறிமுகப்படுத்தியுள்ளனர். இவற்றின் வேதியியல் பண்புகளின் அளவுகளில் கார்பன், சல்ஃபர் & பாஸ்பரஸ் சதவீதம் அதிகமாக உள்ளது. பல நிறுவனத்தின் 550,600 கிரேடு கம்பிகள் வேதியியல் பண்புகளை கவனத்தில் கொள்ளாமல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதனால் அந்த கம்பிகளில் கிரேடு அதிகமாகவும், Elongation குறைவாகவும் மேலும் வளைக்க கடினமாகவும் இருக்கும். அத்தகைய கம்பிகளை நம்பி வாங்கி பயன்படுத்திய பின் வாடிக்கையாளர்கள் கம்பி வளைக்க கடினமாக உள்ளதை உணர்ந்த பின் அவற்றை வாங்குவதை தவிர்ப்பதும் மேலும் அத்தகைய பிராண்டு கம்பிகளையும் தவிர்ப்பதும் கம்பி டீலர்கள் அறிந்ததே. இந்த விளக்கத்தை வாடிக்கையாளர்களிடம் தெரிவிக்கும் படி AMMAN-TRY கேட்டுக்கொள்கிறது.

AMMAN-TRY ன் தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால் BIS ல் 11 வகையான கிரேடுகளை பல்வேறு ஆராய்ச்சிக்கு பின்னர் படிப்படியாக வெளியிட்டுள்ளது. ஆனால் நாம் நமது கட்டுமான தேவைக்கேற்ப மிகச்சரியான கிரேடு எது என்பதை நாம் தான் முடிவு செய்ய வேண்டும்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக AMMAN-TRY நிறுவனத்தின் கம்பிகள் வளைக்க எளிதாகவும் தகுந்த உறுதியுடனும் உள்ளதாக பல இன்ஜினியர்கள், பில்டர்கள், பார்பெண்டர்கள், ஆகியோரால் பாராட்டு பெற்றுள்ளது.மேலும் கட்டுமான துறை வாடிக்கையாளர்களின் திருப்தியை பெற்ற முதன்மை நிறுவனமாக விளங்கி வருகின்றது.

இதற்கு மூலக்காரணமாக இருப்பது கம்பியின் மூலப்பொருளான பில்லட் - ன் வேதிப்பண்புகளை BIS யில் சொல்லப்பட்ட அளவை விட குறைவாக தயாரிப்பதும் மேலும் கம்பியின் பௌதீக பண்புகளை BIS யில் சொல்லப்பட்ட அளவை விட அதிகமாக தயாரிப்பதும் தான்.

AMMAN - TRY கம்பிகளால் கட்டப்பட்டு பல வருடங்களாக நீடித்து நிலைத்து நிற்கும் கட்டிடங்களே இதற்கு சான்று.

# கட்டுமானத்துறையில் கம்பியின் பங்களிப்பு




எ எந்த ஒரு கட்டுமானத்திற்கும் அது வீடு கோபுரம் பாலங்கள் ஃப்ளை ஓவர் என எதுவாக இருந்தாலும் அடிப்படையானது அதன் அடித்தளமாகும். ஒரு நல்ல வலிமையான அடித்தளம் கட்டிடத்தின் நீண்ட ஆயுளுக்கு மட்டுமல்லாமல், குடியிருப்பவர்களின் பாதுகாப்பிற்கும் முக்கியமானது. ஒரு நல்ல அடித்தளத்தின் அத்தியாவசியமாக TMT கம்பி உள்ளது. அடுத்த முக்கியமான கேள்வி, அதை எவ்வாறு தயாரிப்பு செய்ய முடியும் என்பதை கண்டுபிடிப்பதாகும்.

## How TMT Bars is used in construction?

ஆரம்ப வடிவமான கட்டிடத்தின் கட்டமைப்பை கொடுக்க TMT கம்பிகள் பொதுவாக பல்வேறு அளவுகள் மற்றும் வடிவங்களில் பயன்படுத்தப்படுகிறது. TMT கம்பிகள் அதன் இயல்பாகவே அதிக வலிமையும் மற்றும் எளிதில் வளையும் தன்மையும் உள்ளது. எனவே அத்தகைய பண்புகளை உருவாக்க சூடான உருட்டல், தெர்மோ மெக்கானிக்கல் டிரீட்மென்ட் மற்றும் இயற்கையான காற்றில் கம்பி குளிர்விப்பதன் மூலம் மேம்படுத்தப்படுகின்றன. வலிமையான வெளிப்புற அடுக்கு மற்றும் மென்மையான உள் கோர், மேலும் பல மடங்கு சிறந்த பண்புகளை கொண்டிருக்கிறது.

## Steel as TMT Bars and CRS TMT Bars:

TMT கம்பிகள் அதிக வலிமைக்கு உட்பட்டுள்ளன அதுமட்டுமல்லாமல், அவை எதிர்பாரத பாதகமான நிலைமைகள், பூகம்பங்கள் புயல் மற்றும் நடுக்கம் போன்ற நிலைமைகளை அதிக அளவில் தாங்க கூடியதாக இருக்க வேண்டும். ஏனெனில் இந்த நிலைமைகளின் கீழ் தான் கட்டிடங்களின் வலிமையும் நிலைப்பு தன்மையும் வைக்கப்படுகின்றன. பல்வேறு சோதனைகள் மூலம் TMT கம்பிகளின் பயன்பாடு அத்தியாவசியமானது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.


இது தவிர, CRS கம்பிகள் அவற்றில் ஏற்படும் துருஅரிப்பை எதிர்ப்பதற்காக தயாரிக்கப்படுகின்றது. இந்த பண்பு காப்பர், குரோமியம் ஆகியவற்றை கம்பியில் சேர்ப்பதன் மூலம் பெறப்படுகிறது. இது கம்பிகளின் ஆயுள் நீடிப்பதை உறுதி செய்கிறது. மேலும் துருஅரிப்பு எதிர்ப்பு தன்மை சிறந்த தரத்துடன் உள்ளதை தொடர்புபடுத்துகிறது.

தீவிர வானிலை, அசாதரண காற்று, அதிக வெப்பம் மற்றும் இடியுடன் கூடிய மழை மற்றும் சூறாவளி போன்ற நிலைமைகளின் கீழ் கம்பிகளின் வலிமை பல்வேறு பரிசோதனையின் கீழ் வைக்கப்படும் பொழுது உயர்தர TMT கம்பிகள் தக்கரீதியாக சிறந்த தேர்வாக மீண்டும் தன்னை காட்டியுள்ளது. ஏனெனில் உயர்தரமான TMT கம்பிகள் எப்போதும் தரமற்ற சாதாரண கம்பிகள் மீது தங்கள் ஆதிக்கத்தை நிரூபிக்கின்றன.

# வாஸ்துவின் முக்கியத்துவம்



**வீடு கட்டும் போது வாஸ்து மிகவும் முக்கியமானது. இயற்கையின் ஐந்து கூறுகளான காற்று, நீர், நெருப்பு, பூமி மற்றும் வானம் ஆகியவை சமநிலை பெற்றிருக்கும் இடத்தில் சகல செல்வங்களும் தேடி வரும். இந்த சமநிலையே வாழ்க்கைக்கு செழிப்பைக் கொண்டுவருகிறது. எனவே நீங்கள் ஒரு வீட்டைக் கட்டும்போது இந்த பஞ்சபூதத்தை கணக்கில் கொள்வது தான் வாஸ்து. நம் வாழ்வில் கட்டிடக் கலை முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. அதன் மூலம் வாழ்வில் செழிப்பையும் மகிழ்ச்சியையும் பெறலாம் என்பதோடு, வீட்டின் நேர்மறையான ஆற்றல் கொண்டுவரும் என நம்பப்படுகிறது. தற்போது கட்டப்படும் கட்டிடங்கள் பஞ்சபூதங்களை கருத்தில் கொண்டு கட்டப்படுகின்றன.**




பஞ்சபூதங்களின் சமநிலை தவறும் போது நம் வீட்டில் சில பிரச்சனைகள் சிக்கல்கள் ஏற்படுவதாக வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது. வீட்டில் வாஸ்து சாஸ்திரப் படி எந்த அறைகள் எந்த திசையில் அமைந்திருக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம்...



## பூஜை அறை

வீட்டில் மிக முக்கியமாக இருக்க வேண்டியது இறைவனை வழிபடக் கூடிய பூஜை அறை. இது வீட்டில் வட கிழக்கு பகுதியில் இருப்பது மிகவும் புனிதமானது. சுவாமி படங்கள் கிழக்கு திசை நோக்கி பார்க்கும் படி வைக்க வேண்டும். இந்த திசையில் சேமித்து வைக்கக்கூடிய அறை இருக்கலாம். இந்த பகுதியில் சமையல் அறை, கழிப்பறை, உள்ளிட்டவை இருப்பது ஆகாது



## படுக்கை அறை

வீட்டின் முக்கிய அறைகளின் ஒன்று படுக்கை அறை. ஓய்வு என்பது ஒருவரின் உடல் மற்றும் மன சமநிலைக்கு முக்கியமானது. தூக்கம், ஓய்வு எடுக்கக் கூடிய படுக்கை அறை. வீட்டின் தெற்கு அல்லது தென்மேற்கு திசையில் இருப்பது மிகவும் உகந்தது.



## சமையல் அறை

தென்கிழக்கு பகுதி அக்னி மூலை மூலம் ஆகும். அதனால் வீட்டின் தென்கிழக்கு சமையலறை அமைவதும், கிழக்கு நோக்கி நின்று சமைப்பது மிகவும் நல்லமைப்பாகும். அல்லது பூஜை அறைக்கு அருகில் இருக்கலாம் ஆனால் கழிப்பறைக்கு அருகில் சமையலறை அல்லது பூஜை அறை இருப்பது நல்லதல்ல.



## குளியல் அறை

உடலை சுத்தப்படுத்திக் கொள்வதற்கான இடம் குளியல் அறை. குளிப்பதால் உடல், மனஅழுத்தம் குறையும். இந்த குளியலறை நம்முடைய எதிர்மறை சக்திகளை நீக்கக் கூடியது. இது சூரிய வெளிச்சம் படும் வகையில் அமைய வேண்டும் என்பதால் கிழக்கு பகுதியில் குளியலறை அமைப்பது மிகவும் நல்லது. மூடப்படாமல் சூரிய ஒளி படும் வகையில் அமைக்க வேண்டும்.



## படிக்கட்டுகள்

வீட்டின் படிக்கட்டுகள் மேற்கு அல்லது தெற்கு திசையில் கட்டப்பட வேண்டும் இந்த திசையில் கட்டப்படுவதால் எதிர்மறை ஆற்றலையும் தடுக்கிறது. படிக்கட்டில் ஏறுவது கிழக்கில் தொடங்கி மேற்கு நோக்கி சென்றடைவதாக அல்லது வடக்கிலிருந்து தொடங்கி தெற்கு நோக்கி ஏறுவதாக இருக்க வேண்டும். வீட்டின் வடகிழக்கு அல்லது மையத்தில் படிக்கட்டு கட்டக்கூடாது.

AMMAN-TRY
TMT BARS

# புதிய கட்டிடம் கட்டுபவரா நீங்கள்?

## எங்களுடைய கட்டமைப்பு பொறியாளரின் (Structural Engineer) இலவச ஆலோசனையை பெற்றுக்கொள்ளுங்கள்

கட்டிடங்கள் பல தலைமுறைகளாக நீடித்து நிலைத்து நிற்பதற்கு, அனுபவமிக்க கட்டமைப்பு பொறியாளர்களின் (Strcutural Engineer) ஆலோசனை மிகவும் அவசியம்.

கடந்த 42 வருடங்களாக வாடிக்கையாளர்களின் சேவையில் **AMMAN-TRY** நிறுவனம் தனது சிறப்பான பங்களிப்பை அளித்து வருகின்றது. மேலும் தற்போது புதிதாக வீடு கட்டுபவர்களுக்கு கட்டமைப்பு பொறியாளரால் (Strcutural Engineer) கட்டுமான பொருட்கள் குறித்த

## இலவச ஆலோசனைகளை வழங்குகின்றோம்.



## Login to www.ammantry.com

கீழே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி எங்கள் Expert–ன் ஆலோசனையை பெறுங்கள்.

- https:// ammantry.com website–ல் சென்று பின்னர் மெனுவில் free expert opinion தேர்ந்தெடுக்கவும் அல்லது https://ammantry.com/free-expert-opinion என்ற லிங்க்கை டைப் செய்து பார்வையிடவும்.
- பிறகு உங்கள் மின்னஞ்சலுக்கு ஒரு ஒப்புதல் கிடைக்கப்பெறுவீர்கள்.
- கட்டமைப்பு பொறியாளரின் (Structural Engineer) கருத்துடன் எங்கள் குழு விரைவில் உங்களுக்கு பதிலளிப்பார்கள்.

**AMMAN - TRY STEELS (P) LIMITED, Trichy - 20**

www.ammantry.com +91 75503 01234

Follow us on